**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 68/2017 PW- 4**

Name : ராமலிங்கம்
Father / Husband name : ராமசாமி
Age : 57
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.08.2025.
A1 A2 appearance dispensed. Both side counsel present.

**முதல் விசாரணை**

நான் திண்டிவனம் கிடங்கல் 2 ல் வசித்து வருகிறேன். நான் real estate தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ பார்த்துள்ளேன், தற்போது நினைவில் இல்லை. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பாக எதிரி தேவராஜ் agreement போட என்னை cuddalore ல் உள்ள குப்பம் என்ற ஊரில் அவரது அலுவலகத்திற்கு அழைத்து சென்றார். ஒரு agreement நகலை அ.சா.1 மங்கையின் கணவர் வேலாயுதம் என்பவரிடம் கொடுத்தார். நான் கையொப்பம் பெற்று வருவதாக வேலாயுதம் கூறினார். மற்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது)**

அந்த agreement என்னவென்றால் ஒரு இடத்தை மங்கை என்பவர் தேவராஜ் என்பவருக்கு விற்க ஏற்படுத்தப்பட்ட agreement ஆகும். அந்த இடம் எங்கு உள்ளது என்றால் தெரியாது. எவ்வளவு விஸ்த்திரம் என்றால் 50 - 60 செண்ட் என்று பேசிக்கொண்டார்கள். எந்த வருடத்தில் நடந்தது என்றால் 1990 - 1991 இருக்கும், சரிவர நினைவு இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் MA படித்துள்ளேன். எந்த வருடம் படித்தேன் என்றால் 2003 ம் வருடத்தில் அண்ணாமலை பழ்கலை கழகத்தில் முடித்தேன்.

நான் 12ம் வகுப்பில் தேர்ச்சி அடையாமல் MA படித்தேன். கிரைய தொகை எவ்வளவு என்றால் தெரியாது. அந்த agreement ல் கையொப்பம் செய்து கொடுக்கப்பட்டதா என்றால் தெரியாது. அப்போது என்ன வேலை செய்தேன் என்றால் real estate வேலை செய்தேன். நான் தான் இடத்தை பேசி முடித்தேனா என்றால் இல்லை. தேவராஜ் எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 1987 ல் இருந்து 3 - 4 வருடமாக தொழில் ரீதியாக பழக்கம். எனது உறவினர் அல்ல. agreement ஏற்படுத்தப்பட்டதா மற்றும் அவர்களுக்குள் வழக்கு நடந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி விவரத்தை போலிசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் சொன்னேன். தேவராஜ் 1987 ம் வருடத்திலிருந்து எனக்கு பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

யார் கையொப்பம் பெற்று வருவதாக வேலாயுதம் சொன்னார் என்றால் அவரது மனைவியின் கையொப்பம். நானும், தேவராஜும் ஒன்றாக இருந்தோம் என்றால் சரிதான். என்னிடம் அந்த agreement யை தேவராஜிடம் கொடுத்தாரா என்றால் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா. ஆ. 4 agreement தேவராஜ் கொடுத்ததா என்றால் ஆமாம். அதில் பார்ட்டி கையொப்பம் செய்வதற்கு முன்னால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். போலிசார் என்னை 8 ஆண்டுகளுக்கு முன்பு விசாரித்தாரா அல்லது சமீபத்தில் விசாரித்தார்களா என்றால் 8 - 9 ஆண்டுகளுக்கு முன்பு விசாரித்தார். அதன் பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Sd/ M.Elavarasi,
Judicial Magistrate No.I, Tindivanam